சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**<u>ஆணை நாள் 22.04.2026</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு)., மாநில தகவல் ஆணையர்

•••••

**<u>வழக்கு எண். SA 4816/E/2024, CP 2421/E/2024, CP 2376/E/2024</u>**

திரு.வாராகி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
பிரிவு அலுவலர்,
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, பொது அதிகார அமைப்பு
தலைமைச்செயலகம், சென்னை-09.

******

**<u>ஆணை</u>**

வழக்கு எண். SA 4816/E/2024, CP 2421/E/2024-ன் மீது இவ்வாணையத்தால் 06.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பரமேஸ்வரி, பிரிவு அலுவலர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 09.04.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில் ஆணையத்தின், 06.01.2026 தேதியிட்ட உத்தரவுக்குப் பின், இவ்வழக்கில் ***<u>மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனுதாரரின் புகார் மனு மீதான விசாரணை அறிக்கையை தகுந்த ஆவணங்களுடன் அரசிற்கு சமர்ப்பிக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (அரசு கடித எண்.8770575/இசட்1/2024-2, நாள் 29.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக) மீள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்ற விபரம், பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறை, கடித எண்.8770575/இசட்1/2024, நாள் 09.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது</u>***.

3. அதனையடுத்து, பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறை, கடித எண்.8770575/இசட்1/2024, நாள் 01.04.2026

தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ***மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் 12.02.2026 நாளிட்ட முகப்பு கடிதத்துடன் பெறப்பட்ட 06.06.2024 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரரின் புகார் மனு மீதான நடவடிக்கையின் இடைக்கால அறிக்கை அரசில் பெறப்பட்டதாகவும், அவ்வறிக்கையில், குற்றச்சாட்டுகள் ஆய்வு செய்யப்படவில்லை என தெரிவித்து, தகுந்த ஆவணங்களுடன், மீள சமர்ப்பிக்க அரசு கடித எண்.4894783/இசட்1/2023, நாள் 17.03.2026 தேதியிட்ட தலைமைச் செயலாளரின் கடிதத்தின் வாயிலாக மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மீளக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது***.

4. மேலும், 06.01.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவில், பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் குறித்து மனுதாரர் தனது வாதுரையினை தெரிவிக்க விரும்பும் பட்சத்தில், மனுதாரர் தனது எழுத்து மூலமான வாதுரையினை 27.02.2026-க்குள் இவ்வாணையத்திற்கு முகவரியிட மனுதாரருக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.

5. அதன்படி, பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறை, அவர்களால் 09.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ள (மேற்படி கடிதம் மனுதாரர் முகவரியில் 12.02.2026 அன்று சார்வு செய்யப்பட்டுள்ளதற்கான அஞ்சல் துறையின் இணையதள அறிக்கை சமர்ப்பித்துள்ளார்) தகவல் குறித்து மனுதாரரிடமிருந்து எழுத்து மூலமான வாதுரை ஏதும் இன்று (22.04.2026) வரை இவ்வாணையத்தில் பெறப்படவில்லை.

6. மேலும், பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறை, அவர்களால் 01.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ள (மேற்படி கடிதம் மனுதாரர் முகவரியில் 04.04.2026 அன்று சார்வு செய்யப்பட்டுள்ளதற்கான அஞ்சல் துறையின் இணையதள அறிக்கை சமர்ப்பித்துள்ளார்) தகவல் குறித்தும் நாளதுவரை மனுதாரரிடமிருந்து எழுத்து மூலமான வாதுரை ஏதும் இன்று (22.04.2026) வரை இவ்வாணையத்தில் பெறப்படவில்லை.

7. மேலும், மனுதாரர் 07.05.2024 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ள **மற்றொரு புகார் மனுவானது** (வழக்கு எண்.CP 2376/2024) 18.02.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அன்றை விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. ஒரே தேதியிட்டு ஒரே தகவல்களை சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் வழங்கக் கோரிய மனுதாரரின் 07.05.2024 தேதியிட்ட புகார் மனுவானது, ஏற்கனவே இவ்வாணையத்தால் 06.01.2026 தேதியிட்டு நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த வழக்கு எண்கள். SA 4816/E/2024, CP 2421/E/2024-ளுடன் இணைத்து, பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து அறிக்கை பெறும் பொருட்டும், மனுதாரரின் வாதுரை கடிதம் கிடைக்கப்பெறும் பொருட்டும், வழக்கு எண்.CP 2376/2024-ன்மீது இவ்வாணையத்தால் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

8. மனுதாரரால் ஒரே தேதியிட்டு, ஒரே தகவல்களை வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மூன்று வழக்குகளானது (வழக்கு எண். SA 4816/E/2024, CP 2421/E/2024, CP 2376/E/2024), பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட 09.04.2026 தேதியிட்ட அறிக்கை மற்றும் ஆவணங்கள் இவ்வாணையத்தால் இன்று ஒருசேர பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

9. இவ்வழக்குகளில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனுதாரரின் 02.06.2023 தேதியிட்ட புகார் மனு மீது, 01.04.2026 வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரங்கள், பொதுத் தகவல் அலுவலர் / பிரிவு அலுவலர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் 09.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், 01.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், மனுதாரருக்கு தகவலாக வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது.

10. மேலும், இவ்வழக்குகளில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனுதாரரின் 02.06.2023 தேதியிட்ட புகார் மனு மீது, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் பட்சத்தில், அதுகுறித்த தகவல்களை மனுதாரருக்கு, கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்க **பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களுக்கு உத்தரவிட்டு**, **இவ்வழக்கானது முற்றாக்கம் செய்யப்படுகிறது**.

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 4816/E/2024, CP 2421/E/2024.**

**CP 2376/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர்,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை,
தலைமைச்செயலகம், சென்னை-09.

**மேல்முறையீட்டாளர்**

திரு.வாராகி,
எண்.2/3, சனத்தானந்த பாரதி தெரு,
கணபதிபுரம், கிழக்கு தாம்பரம்,
சென்னை- 600 059.

Copy to: File MP/PA**,**